## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

## DTS 3223 Play Production

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

### பகுதி – I

01. (அ) நாடகத் தயாரிப்பு என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) நாடகத் தயாரிப்பாளரின் பணிகளை வகைப்படுத்தி மதிப்பிடுக. (10 புள்ளிகள்)

02. அரங்கத் தயாரிப்பு வித்தியாசங்களும் தனித்துவங்களும் அதனதன் அரங்கப் பாணியையும் செயற்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டு மாறுபடும் என்பதனைப் பின்வரும் தலைப்புக்கள் மூலம் ஆராய்க.

(அ) நவீன நாடகத்தில் நெறியாளரின் (Director) செயற்பாடு (06 புள்ளிகள்)

(ஆ) பட்டறை அரங்கில் இணைப்பாளரின் (Facilitator) செயற்பாடு (07 புள்ளிகள்)

(இ) கூத்தரங்கில் அண்ணாவியாரின் செயற்பாடு (07 புள்ளிகள்)

03. (அ) பாரம்பரியக் கூத்தரங்கத் தயாரிப்பு முறையில் களரியடித்தலின் முக்கியத்துவத்தை உமது பங்குகொள் அனுபவத்தினூடாகத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ஆ) கூத்துருவாக்கப் பின்புலத்தில் முன்னீடு முகாமைத்துவச் செயற்பாடு பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

### பகுதி – II

04. நவீன நாடகத் தயாரிப்பு எண்ணக்கரு செயற்பாட்டு முறையினை நீர் ஒரு தயாரிப்பாளர் என்ற வகையில் "எந்தையும் தாயும்" நாடக உருவாக்க வெளியில் எவ்வாறு திட்டமிட்டு பிரயோகிப்பீர் என்பதை உமது பங்குகொள் அனுபவத்தின் மூலம் நிறுவுக. (30 புள்ளிகள்)

05. "ஈழத்துத் தமிழ் அரங்கச் சூழலில் நெறியாளரே நாடகத் தயாரிப்புக்கான அனைத்துப் பணிகளையும் செய்து நாடகத்தை மேடையேற்றுகிறார்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க. (30 புள்ளிகள்)

06. யதார்த்த விரோத நாடகத் தயாரிப்பு முறையில் பாத்திரவாக்கம், காட்சியமைப்பு, இசை, வேட உடை ஒப்பனை ஆகியவற்றின் வித்தியாசங்களை நீர் பங்குகொண்ட அபசுர நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிக்குக. (30 புள்ளிகள்)

*****